தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண்.019530 /எம்/இ4/2022, நாள். 25.06.2022

| | |
|---|---|
| பொருள்– | பள்ளிக் கல்வி – மானியக் கோரிக்கை 2022–23 – சதுரங்க ஒலிம்பியாட் – அனைத்து மாவட்டங்களிலும் பள்ளி, வட்டாரம், மாவட்டம், மாநில அளவில் மாணவர்களுக்கு சதுரங்கப் போட்டிகள் நடத்துதல் – சார்பு. |
| பார்வை– | 1. 2022–23ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கை அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அறிவிப்புகள்.<br>2. அரசாணை நிலை எண்.110 பள்ளிக்கல்வி (பக7(2))த் துறை நாள். 22.06.2022.<br>3.பள்ளிக் கல்வி முதன்மை உடற்கல்வி ஆய்வாளரின் கடித ந.க.எண்.41/ஆ1/2022, நாள்.13.06.2022. |

*******

சர்வதேச அளவிலான 44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகள் மாமல்லபுரத்தில் எதிர்வரும் 27 ஜுலை 2022 முதல் 10 ஆகஸ்ட் 2022 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக பார்வை (1)இல் கண்டுள்ளவாறு மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு மற்றும் பார்வை (2)இல் கண்டுள்ள அரசாணையின்படி அனைத்து அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பள்ளி, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலும் சதுரங்கப் போட்டிகளை நடத்திடவும், மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவ, மாணவியருக்கு மாநில அளவில் முகாமை நடத்திடவும், அம்மாணவர்கள் சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் வீரர்களுடன் கலந்துரையாடச் செய்யவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி அனைத்து மாவட்டங்களிலும் போட்டிகள் நடத்தி மாணவ, மாணவியரைத் தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வழிகாட்டு நெறிமுறைகள்–**

1. தமிழகம் முழுவதும் உள்ள அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சதுரங்கப் போட்டிகளில் உள்ள விதிமுறைகள் மற்றும் நுட்பங்களைப் பயிற்றுவிக்க ஏதுவாக பள்ளிகளில் பணியாற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்கள் (நிலை 1 & 2) மற்றும் பகுதிநேர உடற்கல்வி ஆசிரியர்களுக்கு 02.07.2022 க்குள் ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி அந்தந்த மாவட்டங்களில் உள்ள சதுரங்க சங்கங்களைக் (Chess Association)கொண்டோ சிறந்த சதுரங்க விளையாட்டு வீரர்களைக் கொண்டோ அளிக்கப்பட வேண்டும் .
2. சதுரங்கப் போட்டிகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சதுரங்கப் போட்டிகளில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களை இனம் கண்டு

அவர்களின் வாயிலாக 04.07.2022 முதல் 08.07.2022 வரை காலை வணக்கக் கூட்டத்தின்போது சதுரங்க விளையாட்டுக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

3. மேற்காணும் பயிற்சியைப் பெற்ற ஆசிரியர்களை கொண்டு 1–5ஆம் வகுப்பு வரை, 6–8ஆம் வகுப்பு வரை, 9–10 மற்றும் 11–12ஆம் வகுப்பு என 4 பிரிவினராக போட்டிகள் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

| வ. எண் | போட்டி நடைபெறும் நிலைகள் | போட்டி நடைபெறும் நாள் | போட்டியில் கலந்து கொள்ளும் வகுப்புகள் |
|---|---|---|---|
| 1 | பள்ளி அளவில் | 11.07.2022 & 15.07.2022 | 1 முதல் 12ஆம் வகுப்புகள் வரை |
| 2 | வட்டார அளவில் | 20.07.2022 | 6 முதல்12ஆம் வகுப்புகள் வரை |
| 3 | மாவட்ட அளவில் | 25.072022 | 6 முதல்12ஆம் வகுப்புகள் வரை |
| 4 | மாநில அளவிலான பயிற்சி முகாம் / போட்டி | 01.08.2022 முதல் 05.08.2022 | 6 முதல் 12ஆம்வகுப்புகள் வரை |

குறிப்பு: வழிகாட்டு நெறிமுறை 3 இல் குறிப்பிட்டவாறு சம்மந்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த குழுக்களுக்குள் மட்டுமே போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு குழுவிலிருந்தும் பள்ளி அளவில் முதல் இரண்டு இடங்களைப் பெறக்கூடிய மாணவ, மாணவியர் ( 6 முதல் 8,9–10,11–12ஆம் வகுப்புகளைச் சார்ந்த குழுக்கள் மட்டும்) வட்டார அளவிலான போட்டிகளில் பங்கேற்கத் தகுதி பெறுவர்.
5. வட்டார அளவில் நடைபெறும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறகூடிய 6 முதல் 12 ஆம் வகுப்புகள் வரை மாணவ, மாணவியர் மாவட்ட அளவில் பங்கேற்கத் தகுதி பெறுவர். வட்டார அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதகள் வழங்கப்பட வேண்டும்.
6. மாவட்ட அளவில் முதல் இரண்டு இடங்களைப் பெறக்கூடிய 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ, மாணவியர்கள் மாநில அளவில் நடைபெறும் பயிற்சி முகாம் மற்றும் போட்டிகளில் பங்கேற்பர். மேலும், அம்மாணவர்கள் சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் வீரர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பையும் பெறுவர். மாணவர்களைத் தகுந்த பாதுகாப்புடன் அழைத்து வர இணைப்பில் கண்டவாறு 12 மண்டலங்களாகப் பிரித்து 12 பொறுப்பு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெறும் மாணாக்கருக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க வேண்டும்.
7. மாவட்ட அளவில் முதல் இடங்களைப் பெறக்கூடிய 9–10 மற்றும் 11– 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் (4+4=8*38=304) சதுரங்க ஒலிம்பியாட் போட்டியினைக் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு பார்வையிடும்

வாய்ப்பினைப் பெறுவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாணவர்களைத் தகுந்த பாதுகாப்புடன் அழைத்து வருவதற்கு ஒவ்வொரு பொறுப்பாசிரியரை நியமிக்க வேண்டும். சதுரங்கப் போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

| வ.எண் | நாள் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | 30.07.2022 | கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி |
| 2 | 31.07.2022 | நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு |
| 3 | 01.08.2022 | இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி |
| 4 | 02.08.2022 | தேனி, விருதுநகர், மதுரை, திண்டுக்கல், கரூர் |
| 5 | 03.08.2022 | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை |
| 6 | 05.08.2022 | தருமபுரி, சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி |
| 7 | 06.08.2022 | அரியலூர், பெரம்பலூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை |
| 8 | 07.08.2022 | கிருஷ்ணகிரி,திருப்பத்தூர், வேலூர், இராணிப்பேட்டை |
| 9 | 08.08.2022 | திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு |

8. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு செயல்பாடுகளுக்கு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தேவைப்படும் நிதி ஒரு சில தினங்களில் சம்மந்தப்பட்ட மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இது குறித்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களுக்கு இணை இயக்குநர் (நாட்டு நலப்பணி) அவர்கள் தலைமையில் இணையவழி கலந்தாய்வுக் கூட்டம் வரும் 28.06.2022 காலை 10 மணிக்கு நடைபெறும்.

எனவே, சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளில் அரசு பள்ளி மாணவர்கள் பங்கேற்றுச் சிறப்பிக்கும் வகையில் பள்ளி, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளை நடத்திட அனைத்துப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் / இயக்குநர்கள் மற்றும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களுக்கு தக்க அறிவுரை வழங்கிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

25.6.22

பள்ளிக்கல்வி ஆணையருக்காக,

**பெறுநர்—**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவர்கள்

(மின்னஞ்சல் வழியாக)

**நகல்—**

1. அரசு முதன்மைச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை—9.
2. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
3. இயக்குநர், தொடக்கக் கல்வி